தமிழ்

மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 3 | ஜனவரி 1943 | இதழ் 1

கீழ்ப்பாக்கம்,
சென்னை, 31-1-43.

அன்புடையீர் !

சென்ற ஆண்டு இதழ்களைக் குறித்த காலத்தில் வெளியிடத் தவறினோம். அப்பிழையைப் பொருட் படுத்தாது நம்மை இன்றும் ஆதரித்தும், வியாசங்களையும், அனுபவங்களையும் எழுதி அனுப்பியும் வரும் அன்பர்களுக்கு நம் வந்தனத்தை யளிக்கிறோம்.

சென்னையில் ஊழி தோன்றி மக்களை வாட்டுவதால் அதைப் பரவாது தடுக்க மாதம் ரூபாய் 60/- வீதம் கொடுத்து வைத்தியர்கள் அமைக்கப் படுகின்றனர். இச்சம்பளம் அவர்களுடைய உழைப்புக்குப் போதிய தல்ல. ஆயினும் மக்களின் நன்மையையும், சண்டையினால் ஏற்பட்ட கஷ்டங்களையும் உணர்ந்து அச்சம்பளத்திற்கு வேலை செய்கின்ற L.I.M.களைப் போற்றுகிறோம்.

இராமநாதபுர ஜில்லாவில் பல கிராம சித்த வைத்தியசாலைகளைத் தொடங்கி யிருக்கின்றனர். அவ்வைத்தியசாலைகளில் L.I.M.கள் வேலை செய்து தமிழ் மருத்துவத்தை விருத்தி செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம்.

நம் பொழிலின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் இடையூறாக விருக்கும் இப்போர் இவ்வாண்டுக்குள் வெற்றிகரமாக முடிந்து நமக்கும் நம்நாட்டுக்கும் இன்பத்தை யுண்டாக்குமாக.

இங்ஙனம்:
கோ. துரைராசன்,
தலைவர்,
தமிழ் மருத்துவப் பொழில், காரியகமிட்டி.

கண்ணோய்கள் அணுகா நெறிகள்

கோ. துரைராசன்.

பஞ்சேந்திரியங்களுள் கண்சிறப்பாகு மென்பதைக் 'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை' என்றதாலறியலாம். கண்கள் தீ முதற் பொருளைச் சிறப்பாகப் பெற்றிருப்பதாகப் பல சித்தர்கள் கூறியிருக்கிறார்கள். இங்ஙனம் அவை பெற்றிருப்பதால்தான் அவைகளின் உதவியால் வடிவங்களையும், நிறங்களையும் காண முடிகிறது. ஓரிடத்தினின்று வேறோரிடத்திற்குச் செல்லவும், ஆங்காங்குள்ள பல காட்சிகளைக் காணவும் உதவுகின்றன. இங்ஙனம் பயன்படும் கண்களை எவ்வித நோயும் அணுகாமல் காப்பது கடமையன்றோ!

பிறந்த பிறகுதான் கண்களுக்குப் பழுது உண்டாம் என எண்ணவேண்டாம். அதற்கு முன்பும், அதாவது சூலிலேயே, தாய்களின் உள்ள உடலாதி வேற்றுமைகளினால் கண்களுக்குத் தீங்கு உண்டாம். வீட்டுவிலக்கமான காலத்தில் தம் கண்களுக்கு பெண்கள் மை தீட்டக்கூடாது. தீட்டில், தீட்டிய காலத்துமுழுக்கு நின்று கருதரித்து குழவி பிறக்கின் அதன் கண்கள் குருடாகவோ, அல்லது பார்வை மந்தமாகவோ ஆகுமெனக் கருதப்படுகிறது. மேலும் கர்ப்ப காலத்தில் தாயானவள் வேகமான மருந்துகளை யுண்பதாலும், விடங்களால் தீண்டப்பட்டுப் பூர்த்தியாய் சுகமடையாததாலும், அன்னந் தண்ணீர் திருப்தியாகக் கொள்ளாததாலும், பிறக்கும் குழந்தை பிறவிக் குருடாகும். அன்றியும் அவள் திகிலடைதலாலும், பசியாயிருத்தலாலும், மாங்கனி காய்களை விரும்பி அதிகமாய் உண்பதாலும், வயிற்றில் கிருமிகள் அதிகம் சேர்தலாலும் சிசு பிறந்தவுடன் அதன் கண்களில் நோய் உண்டாகும். இதனை,

> "கர்ப்பத்தில் சிசுவாம் போது கிருமிகள் சேர்ந்திட் டாலும்
> கப்பிய பசியுற்றாலுங் கலக்கங்கோள் திகில்நேர்ந்தாலும்
> செப்புமாங் கனிகாய் மெத்த தேடியே புசித்திட் டாலும்
> ஒப்பறு மகவின் கண்ணில் வியாதிவந் தணுகுந் தானே"

எனும் அகத்தியர் நயனவிதி செய்யுளால் அறியலாம்.

கால்கள் வருந்தும்படி நீண்டதூரம் நடத்தல், அதிவிரைவாக நடத்தல், பருக்கைக் கற்கள் பாதங்களில் உறுத்தும்படி நடத்தல், அடிசுடும்படி வெயிலில் நடத்தல், கடுகிய வெயிலில் திரிதல், அங்ஙனம் திரிந்துவந்து உடனே குளித்தல், தூக்கம் யில்லாதிருத்தல், அதிதூக்கஞ் செய்தல், தூங்குங்கால் உட்காந்து கவிழ்ந்து தூங்குதல், எண்ணெய் முழுக்குக்குப் பிறகு பகல் தூக்கங் கொள்ளுதல், எண்ணெய்ப் பசை முற்றும் போகாது குளித்தல், அந்தி சந்தி காலங்களில் படித்தல், கூர்மையாய் படித்தல், கவிழ்ந்த பார்வையாய்

பொருள்களை உற்றுப்பார்த்து வேலை செய்தல், மின்னல், நெருப்பு மற்றும் இவைபோன்ற அதிக ஒளியுள்ள பொருள்களைப் பார்த்தல், அதிக காற்றில் இருத்தல், அதிக நீர் குடித்தல், பத்திய காலத்தில் காடி முதலிய புளிப்புப் பொருள்களை உட்கொள்ளுதல், உஷ்ணப் பொருள்களை முகருதல், மையல் கொள்ளுதல், சினங் கொள்ளுதல், மனம் வருந்துதல், திரவிய நஷ்டமாதல், உஷ்ணம் அதிகரித்தல், தேகம் வறட்சி கொள்ளுதல், நகங்கள் வளர்ந்திருத்தல், பழைய மலம் சேருதல், மந்தப்படுதல், தலையில் பெருஞ்சுமை யெடுத்தல், தடியடிபடுதல், உண்ணும் உணவில் கல்கடிபடுதல், கல், மண், மயிர் உட்செல்லுதல், பாக்கு, வெற்றிலையை கன்னத்தில் அடக்கி வைத்தல், இவைகளும், இன்னும் இவைபோன்ற வேறு உள்ளஉடலாதிகளின் செயல்களுமே கண்கள் பழுதுபட காரணங்களாமென அகத்திய நயனவிதி கூறுகிறது. அன்றியும் *பாஷாணம் தின்றலாலும் மேகத்தாலும், வெட்டையாலும் புண்ணிலிடும் காரசாரத்தாலும், இரசபாஷாணங்களின் புகைகளாலும் காரசாரங்களை முகர்வதாலும் சலக்கட்டாலும், பேதியாலும், தண்ணீர் பேதங்களாலும் கண்ணோய்கள் வருமென திருமூலர் குறிப்பிட்டுள்ளார். மற்றும் நாகமுனிவர்

"பூவையே பூமுன் றென்று புகலும்பே ரதனைக் கேளாய்
தாவுவை சூரி யாலுந் தழலெழு வியாதி யாலும்
மேவிய நீரி னாலும் விழியிடை மூன்று ரோகம்
கூவிய ஆணி யுந்தல் குழம்பிய புகையா மூன்றே"

என நயனவிதியில் கூறியதால் வைசூரியினாலும் கண்கள் பழுதுபடுமென அறியலாம். ஆகையால் மேற்கூறிய செயலாதிகளை நீக்க வேண்டும். மேகம், வெட்டை, வைசூரி முதலிய கொடிய தழலெழும் நோய்கள்வராது காக்கவேண்டும். (தொடரும்)

---

*பாரே பொடிச்சுடல் பருவெயின் மேற்படல்
வாரேறு கொங்கையாள் மாயை மிகச்செயல்
காரே முழுக்கறல் கண்ணலனல் பார்த்தல்
சீரேறு பாடாணம் தின்றதாற் கண்ணோயே

கண்ணோய் வருகிற காரண மின்னுங்கேள்
பண்ணன மேகத்தாற் பருவெட்டை வாயுவால்
தண்ண மலகட்டால் தண்சலக் கட்டினால்
புண்ண மிரணத்திற் போடுங் காரத்தாலே

காரச் சுறுக்காற் கடுரசத் தூமத்தால்
நேரொத்த சாற நின்றமூக்கின் வாசத்தால்
பாரொத்த பேதியாற் பலபல தண்ணீரால்
சீரொத்த கண்ணில் சிறக்கும் வியாதியே

தாவரப் பொருள்கள்

T. S. அமிர்தலிங்கம் பிள்ளை, தஞ்சாவூர்.

"வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி யோடும் தொடர்ந்த வினைகளே."

தமிழ் மொழி வழங்கும் நாட்டை ஆன்றோர் பன்னிரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன:—

தென்பாண்டி குட்டம் குடம் கற்கரவேண்பூழி
பன்றியருவா வதன் வடக்கு—நன்றாய்
சீதமலாடு புனல்நாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்.

இங்ஙனம் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழ் வழங்கும் நாடுகள் பன்னிரண்டினுள் நாமிருக்கும் இந்நாடு புனல் நாடு என்பதாகும்.

ஆயுர்வேதம், சித்த வைத்தியம் என்ற இவ்விரு வைத்தியமும் இந்நாட்டில் ஏற்படுவதன்முன் வைத்திய சிகிச்சைகள் நடைபெற்று வந்திருக்கின்றன. எல்லாம் பச்சிலைகளைக்கொண்டே நடந்து வந்திருக்கின்றன. பச்சிலையோ எனில் 20 லட்சம் வகை என கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு மேற்கொள்:—

ஊர்வ பதினொன்றாம் ஒன்பது மானிடம்
நீர்ப்பறவை நாற்கால் ஓர் பப்பத்தாம்—சீரிய
பந்தமாம் தேவர் பதினாலு அயன்வகுத்த
அந்தமில் சீர்த்தாவரம் நாலைந்து.

முற்காலங்களில் பற்பல வியாதிகளை பச்சிலைகளைக் கொண்டே நிவர்த்திசெய்து வந்திருக்கிறார்கள். அவ்வித பச்சிலைகள் இயற்கையில் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் யான் கண்டும் கேட்டுமுள்ளவைகளில் சிலவற்றை சொல்லுகிறேன்.

ஜன்னிகண்ட ஒருவனுக்கு ஒரு குப்பத்திலிருந்த ஒரு வைத்தியர் சிகிச்சை செய்யவந்தார். நோயாளியைப் பார்த்துவிட்டு 'இதோ வருகிறேன்' என்று சொல்லி வெளியே போய் ஒரு பச்சிலையைக் கொண்டுவந்து கையில் வைத்து கசக்கி சாற்றைப் பிழிந்துவிட்டு சக்கையை வில்லையாகச்செய்து உச்சியில் வைத்து ஒரு துணியைக் கொண்டு கட்டினார். ஐந்து நிமிஷங்கள் சென்றவுடன் கட்டை அவிழ்த்து வில்லையை எடுத்துப் பிழிந்தார். அந்த பச்சிலையில் முன்னிருந்த சாற்றைவிட மூன்று மடங்கு நீரைப் பிழிந்தார்.

கட்டை அவிழ்த்தவுடன் நோயாளி மூடிக்கிடந்த கண்ணை விழித்து பேசத் தொடங்கினான். "ஜன்னி முறிந்துவிட்டது. இனி யாதொரு மருந்தும் வேண்டாம். நாளுக்கு நாள் சுரமும் குறைந்து வரும்" என்று சொல்லிப் போனார். அப்படியே வேறொரு மருந்துமின்றி நோயாளி குணமடைந்தான். கடைசியாக சில பச்சிலைகளைக் கொண்டுவந்து கஷாயம்போட்டு உள்ளுக்கு ஒரு நாள் கொடுத்தார். பிறகு ஸ்நானம் செய்துவைத்தார். இதை நான் கண் கூடாகக் கண்டு மகிழ்ந்தேன். கோரோசனை கஸ்தூரி கண்டாவிழ்தம் முதலியவைகளில் ஒன்றும் கொடுக்கவில்லை. அந்த பச்சிலை நல்வேளை.

சுரத்திற்கு கஷாயம் போட்டுக்கொடுக்க ஏற்பட்டிருக்கிற பச்சிலைக் கூட்டுகளில் விஷ்ணு கிராந்தி ஒன்றாகும். "விடாத சுரத்திற்கு விஷ்ணு கிராந்தி" என்றொரு பழமொழியும் வழங்கிவருகிறது. இது சுரத்தைக் கண்டிப்பது மட்டுமல்ல, மதம்பிடித்த யானையை வசப்படுத்தும் ஓர் மகத்துவம் தங்கிய பச்சிலையாகும். இதன் மகிமையை நான் கண்டபடி சொல்லுவேன்.

தஞ்சாவூர் அரண்மனையில் கைலாசவாசி சக்காராம் சாகேப் அவர்களுக்கு 'தார்' என்ற ஊரிலிருந்து வந்த நீண்ட தந்தமுள்ள ஒரு பெரிய யானை இருந்தது. அது ஒருவருக்கும் அடங்குவதில்லை. அக்காலத்தில் கோவிந்தமாவுத்தரென்ற ஒரு மாவுத்தர் என் வீட்டில் குடியிருந்தார். அவரிடம் அந்த யானையை ஒப்புவித்தார்கள். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. அவர் ஒரு நாள் ஒரு சிறு சுவடியை என்னிடம் கொடுத்து இதில் யானையை வசப்படுத்த ஒரு பச்சிலை இருக்கிறது. அதைப் பார்த்து சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டார். அந்த சுவடியை நான் படித்துக்கொண்டே வரும்போது இந்த பச்சிலையின் பிரயோகத்தைப்பற்றி எழுதியிருந்தது. உடனே அவர் அந்த மூலிகையைக் கொண்டுவந்து அரையில் தரித்துக்கொண்டு யானையிடம் செல்லவே அக்கொடிய கைமா அவரிடம் அடங்கி சொற்படி நடந்துவந்தது. இதுவும் யான் கண்கூடாகக் கண்டதுவே. இதில் ஒரு விந்தை இருக்கிறது. விஷ்ணு கிராந்திக்கும் யானைக்கும் என்ன சம்பந்தம் என்றால்:—

முன் ஒரு காலத்தில் கஜேந்திரன் என்னும் யானையை ஒரு கராவானது பிடித்துக்கொள்ள "ஆதிமூலமே" என்று யானையானது அலற உடனே மகாவிஷ்ணுவானவர் பிரசன்னமாகி கஜேந்திரனைக் காப்பாற்றியதாக புராணம் கூறும். யானைக்குவந்த ஆபத்தினின்றும் காப்பாற்றினவர் மகாவிஷ்ணுவானபடியால் விஷ்ணுகிராந்தி என்ற பெயரில் விஷ்ணு என்ற உபகாரியின் பெயர் இருப்பதால் யானை கட்டுப்படுகிறது. அதன் பூ நீலமேக நிறமாய் யுள்ளதாலும், அந் நிறம் மகாவிஷ்ணுவின் நிறமானபடியாலும் மகாவிஷ்ணுவின் அம்சம்

என்றே சொல்லலாம். சிலர் நீல பூவைவிட வெள்ளை பூ பூர்கிற பூண்டு சிறந்ததென்பார்கள். அதுவும் பொருந்தும். ஆதியில் திருமாலின் நிறம் ஸ்படிக நிறம். திருப்பாற்கடலை அமுதமெழக் கடைந்த காலத்தில் கடலில் விஷந்தோன்ற அவ்விஷ சுவாலையினுல் திருமாலின் நிறம் கறுத்தது என்று கூறும் ஒரு புராணம்.

முற்காலங்களில் கருவுயிருர்த்த பெண்களுக்குச் சங்கணிலையை அரைத்துக் கொடுத்து வந்தார்கள். அதனுல் குழந்தைகளுக்கு கரப்பான், செங்கிரந்தி, கருங்கிரந்தி, குட்டம், மேகம், வெட்டை, சொரி, சிரங்கு, சூலை, வாதரோகங்கள், கபச்சேட்டைகள், இருமல், பூச்சிகள் முதலியவைபோய் சுகதேகியாய் இருந்துவந்தார்கள்.

இந்நாட்டின் தென் பாகங்களில் வேப்பெண்ணெயை சாப்பிடுவதை இன்னும் காணலாம். இம்மருந்தைச் சாப்பிட கருவுயிர்த்த பெண்களுக்கு வாதரோகங்கள், கிரந்தி, கரப்பான், சிரங்கு, இசுவு, சுரம், ஜன்னி முதலியவைகள் அணுகாமல் சுகதேகிகளா யிருந்து வந்தார்கள். இன்னும் இந்த வழக்கம் இருந்துகொண்டு வருகிறது. எண்ணெய் சாப்பிட அருவருப்புக் கொள்ளுபவர்கள் வேம்பின் எண்ணெயை நெய்ச்சட்டி என்ற பச்சிலையை சேர்த்துக் காய்ச்சி நெய்யாகச்செய்ய நாற்றம் எடுபட்டுப்போவதால் சாப்பிட்டு வருகிறுர்கள். பராய்மரத்துப் பட்டையை வெட்டிவந்து மேல் புரணியை சீவிவிட்டு உள்ளிருக்கும் சதையை தூளாகச் செய்து ஒரு சிறு துணியில் முடிந்து வேப்பெண்ணெயில் அப்பொக்கணத்தை யிட்டுக் காய்ச்ச எண்ணெய் சுண்டி நெய்யைபோல வெளுத்து உரைந்து நாற்றமற்றிருக்கும். இப்போதோ "எர்க்காட் மிக்ஸ்சர்" முதலிய மருந்துகளையும், Brandy, Wine, முதலியவைகளையும் உபயோகப்படுத்தி வருகின்றுர்கள். ஏழை மக்களுக்கு இம்மருந்துகளை வாங்கவும் டாக்டர்களுக்கு பணம் கொடுக்கவும் எவ்வாறு இயலும்!

மலைவேம்பின் இலையை அரைத்து நீராகாரத்தில் கரைத்துக் கொடுக்க மலட்டுப்புழு, வயிற்றுவலி, இவைதீர்ந்து கர்ப்ப முண்டாகும்.

சிறுகீரை கண்ணுக்கு ஒளியையுண்டாக்கும். கண்காச ரோகங்களைப்போக்கும். நாவி, பாஷாண முதலிய விஷச்சரக்குகள் சேர்ந்த மருந்தை சாப்பிட்டவர்களுக்கு சிறுகீரை வேர்க்குடிநீர் கொடுத்து வருகிறதை நாட்டு வைத்தியர்கள் நன்கு அறிவார்கள்.

கலவைக் கீரையை கறி செய்து சாப்பிடுவதுண்டு. கலவைக் கீரையாவன :—

வேளையிலை, குப்பைமேனியிலை, நெருஞ்சியிலை, நாயுருவியிலை, தும்பையிலை, தவாயிலை, சிறுகீரையிலை, முள்ளிக்கீரை இலை, சாணுக்கியிலை, பிண்ணுக்குக்கீரை இவைகளைச் சேர்த்து சமைத்து சாப்பிட

வாதரோகங்கள், பித்த ரோகங்கள், கபரோகங்ள், மலக்கட்டு, குடல் வாதம்போம். பிரசவித்த பெண்களுக்கு அவசியம் கொடுப்பதுண்டு.

உப்பிலாங்கொடியின் இலை, முள்ளிக்கீரை இவைகளால் தங்க பற்பம் செய்து வருகிறோம். ஆரைக்கீரையால் நீராதபைத்தியம், நீரிழிவு, இரத்தப்போக்கு தீருகின்றன.

செவ்வகத்தியிலையால் பலசிந்தூரங்கள், நவநீத பற்பம், தாளக வெள்ளை உண்டாகின்றன. பிளவைகொல்லி என்றொரு பச்சிலை உண்டு. மிகபயங்கரமானதும் மனிதனுடைய முடிவிற்கே அநேக மாய் உண்டாகும் (Carbuncle) பக்கப்பிளவை, உச்சிப்பிளவை, ராஜப்பிளவை முதலிய பிளவைகளை உபத்திரவமின்றி சௌக்கியப் படுத்துகின்றது. அறுவை தேவையில்லை.

சதையொட்டி என்றொரு பச்சிலையுண்டு. வெட்டுப்பட்ட சதை யைப்பொருத்தி ஆற்றிவிடுகிறது. இவ்வளவு இலகுவான பரிகாரம் நம் நாட்டிலிருக்க "வங்கப்பிளாஸ்திரி, சிவப்பு பிளாஸ்திரி துவ ரெண்ணெய், களிம்பு, இவைகள் ஏன்?

எலும்பொட்டி என்றொரு பச்சிலையுண்டு. அடிபட்டு முறிந்த எலும்புகளை தூளாகப்போயிருந்தாலும், ஒன்றாகப் பொருத்தி ஆற்றிவிடுகிறது.

முடக்கற்றான் என்ற பச்சிலை சூலைப்பிடிப்பால் முடங்கிக் கிடப்ப வனை சீராக்குகின்றது.

சுளுக்கு நாயகம் என்ற பச்சிலை சுளுக்குகளை நீக்குகின்றது மல்லாமல் கட்டிப்போயிருக்கின்ற இரத்தத்தையும் கரைத்து விடுகிறது.

வெதுப்படக்கி என்ற பச்சிலை தன் பெயருக்கிணங்க மாந்த கணம், வயிற்றுவலி, பித்தசுரம் முதலியவற்றைப் போக்குகின்றது.

குன்மக்குடோரி—சூலை, ஈளை, காசம், க்ஷயரோய், குன்மவலி, முதலியவைகளை ஓட்டுகின்றது.

பிரண்டை—இதை நெய்யில் வறுத்து அரைத்து உண்ண மூல ரத்தம், மாந்தம், வயிற்றுவலி, வாய்வு, அதிசாரம், முளைமூலம். கபம், இவைகள்போய் அதிக பசி உண்டாகிறது. சிரார்த்தங் களுக்கு இந்த துவையலை உபயோகித்து வருகிறோம்.

இத்தகைய அரிய பெரிய மகத்தான பச்சிலைகளும், நமது நாட்டிலிருந்து வந்திருக்கின்றன. இப்போது அப்பேர்ப்பட்ட பச்சிலைகளையும் அவைகளின் கிரியைகளையும் தெரிந்தவர்களே மிக சுவற்பமாயிருக்கின்றனர்.

ஆகையால் சகோதரர்களே! சித்த வைத்தியம், ஆயுர்வேதம், யுனானி வைத்தியங்களை விருத்தி செய்யும்பொருட்டு பல விடங்களில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் வைத்திய சங்கங்களில் 'பச்சிலை ஆராய்ச்சி' என்ற ஒரு பகுதியைச் சங்கங்கள் செய்து வருகிற வேலைகளில் ஒன்றாக வைத்துக்கொண்டு பச்சிலைகளையும், அவைகளின் செயல்களையும் சோதித்துப் பார்த்து, அவற்றை வைத்தியத் தோழர்களுக்கு சொற்பொழிவாலும் வெளியீடுகளாலும் தெரிவிக்கவேண்டும்.

ஒப்பு நோக்கு

இதுவு மதுவா?

—:o:—

சுழல் வண்டேரிதல்

பறக்குங் கண்ணில் பூச்சிபோல்
பார்க்கு மிடங்க டனிற்றோற்றும்
உறக்கந் தனிலு மவ்வடைவே
ஓடித் திரிதல் போல்காணும்
துறக்குங் கூசும் புகைந்திருக்கும்
சுடரைப் பார்க்கில் பலவிதமாம்
பிறக்குஞ் சுழல்வண் டெரிதலென்று
பேசி யிருப்பார் பெரியோரே

(பொ-ரை.) பார்க்கின்ற இடங்களிலெல்லாம் பூச்சிப் பறக்கிறது போல தோற்றும். தூங்கும்போதும் பூச்சிகள் ஓடித்திரிகிறது போல தோற்றும். கண் கூசும். பார்வை புகைச்சலாம். விளக்கைப் பார்த்தால் பலவிதமாய்த் தோற்றும். இக்குணங்கள் கண்டால் 'சுழல் வண்டேரிதல்' என்று பெரியோர் சொல்வர்.

(அகஸ்தியர் நயனவிது ஐந்நூறு.)

VITREOUS OPACITIES

"Black speaks floating before the eyes are seen by normal persons under favourable conditions. These muscæ volitantes are opacites of various kinds viewed entoptically ie they throw a shadow upon the sentient elements of the retina thus appearing as dark spots in the field of vision ... Under abnormal conditions muscæ may be so increased as to interfere with vision......"

Page 322.

Parson's Diseases of the eye.